**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4575

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.10.2021

Accepted: 29.11.2021

Published: 01.01.2022

Citation:
Srinivasan, B. "Flowers in Thirumandira and Its Medicinal Properties." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 242–54.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4575

*Corresponding Author:
sribalu1986@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Flowers in Thirumandira and its Medicinal Properties

**Dr. B. Srinivasan**
*Head, Department of Tamil,Christhu Raj College, Panjappur*
*Tiruchirappalli*
http://orcid.org/0000-0002-6838-3947

**Abstract -** Devotional literatures not only tell the story of devotion but also the way of life of the people. There is ample evidence in devotional literature that people have often embraced and worshiped nature. The flowers that nature has given us are not only used to worship the Lord but they are also associated with the lives of the people. It is also used as a remedy for ailments in the body. That is why Tirumular has added flowers and its medicinal properties to Bhaktiyo in his Thirumanthiram. The purpose of the study is to uncover those messages.

**Keywords:** Bhaktiy, Literature, Thirumanthiram, Tirumular, Devotion

**References**

1. Rama Subramaniam, V.D. *Panniru Thirumuraigal*, Volume-1, Sambandar Thevaram, Varthamanan Pathipagam, Chennai, Song – 277.
2. Ramanatha Pillai, P., Thirumanthiram Moovayiram, Kazhaga Veliyeedu, Chennai, 2009. Song -105.
3. Dr.Kathir Murugu, Pathupattu, Kurunjipattu, Mullaipattu, Moolamum Urayium, Saratha Pathipagam, Chennai, 2012, Song – 65.
4. Puliyurkesikan. 2018. *Purananuru Moolamum Urayum*, Chennai, Saratha Pathipagam. Song -158: 9.
5. Ramanatha Pillai. 2009. *Thirumanthiram Moovayiram*. Chennai, Kazhga Veliyeedu, Song -109:1.
6. 2018. *Puliyurkesikan by shorthand and text*. Chennai, Izaratha Publishing House. Song-376: 5-6
7. Anbarasu, P. 2016. *Thirupavai Thiruvempavai Moolamum Eliya Tamil Uraiyum*, Chennai, Narmada Pathipagam, Song -13:8.
8. Narayana Velupillai, M. (1998). *Thiruvasakam Moolamum Telivuraiayum*, Varthamanan Pathipagam, Adakala Song - 1: 1
9. Tamil Annal. 2008. *Tholkappiyam Moolam Uraiyum*, Madurai, Meenatchi Puthaga Nilayam, Page-315.
10. Madurai Muthaliyar, K. 1988. *Nalayadiyar Vilakavurai*, Chennai, Paari Nilayam, Song -283.1.
11. Ramanatha Pillai, P. 2009. Ithirumanthiram Three Thousand University Publication, Chennai. Thirumanthi Rum-979.1
12. Kalaingar M Karunanithi. 2010. *Thirukural Kalaingar Urai*, Chennai, Thirumagal Nilayam, Kural – 114.
13. Somasundaranar, P.V. 1956. *Pathupattu Moolamum Uraiyum*, Perunatrupadai, Kazhga Veliyeedu, Line-375.
14. Srichandran, J. *Seevaka Chintamani Moolamum Thelivuraiyum*, 3rd edition, Gunamalayar Elambagam, Varthamanan Pathipagam, 971:1.
15. Srinivasan, K. *Elakiyathil Thavarangal*, Tamil University, P.595.

16. Kathir Murugu. 2013. *Mangudi Maruthanarin Pathu Pattu*, *Madurai Kanchi Moolamum Urayum*, Chennai, Saratha Pathipagam, Line: 737.
17. Subramania Pillai, K. 1965. *Kambaramayanam*, Annamalai University, Kitkintha Kandam, Kargala Padalam-4283.
18. Kavingar K. 1982. Kovai. Elanseran, Elakiyam Oru Pookadu, Chennai, Rockfort Publications, P.436.

# திருமந்திரத்தில் மலர்களும் அவற்றின் மருத்துவக் குணங்களும்

*முனைவர் பா. சீனிவாசன்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்
கிருஸ்துராஜ் கல்லூரி, பஞ்சப்பூர், திருச்சிரப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***

*பக்தி இலக்கியங்கள் என்பன வெறும் பக்தியினை மட்டும் கூறாமல் மக்களின் வாழ்வியல் முறைகளையும் பறைசாற்றுகின்றது. பெரும்பாலும் மக்கள் இயற்கையை அரவணைத்து பாது காத்து வணங்கி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் பக்தி இலக்கியங்களில் கிடக்கப்பெறுகின்றன. அவ் இயற்கை நமக்கு அளித்த மலர்கள் இறைவனை பூசிக்க மட்டும் பயன்படவில்லை அவை மக்களின் வாழ்வோடு தொடர்பு கொண்டதாகவும் விளங்குகின்றது. அம்மலர்கள் உடல்,உள்ள நோய்களையும் தீர்க்கும் அருமருந்தாகவும் பயன்படுகிறது.அதனால்தான் திருமூலர் தம்திருமந்திரத்தில் மலர்களையும் அதன் மருத்துவக்குணங்களையும் பக்தியோடு சேர்த்து கூறியுள்ளார். அச்செய்திகளை வெளிக்கொணர்வதே ஆய்வு நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், பக்தி இலக்கியம், திருமந்திரம், திருமூலர், மலர், மருத்துவம்.*

## அறிமுகம்

தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பலவும் இயற்கையின் முக்கியத்துவத்தினையும் மக்கள் இயற்கையோடு இயந்த வாழ்வினை வாழ்ந்தனர் என்பதையும் பிரதிபலிக்கின்றன. அவ்விலக்கியங்களுள் பக்தி இலக்கியமும் ஒன்றாகும். இவ்இலக்கியங்கள் பக்தியை மட்டும் போதிக்காமல் இயற்கையின் கொடைகளான காடுகள், மலைகள், ஆறுகள், மரங்கள், மலர்கள், காய்கள், பழங்கள் என அனைத்தின் முக்கியத்துவத்தினையும் பாடல்களில் எடுத்தியம்புகின்றன. அக்கால புலவர்கள் மக்களிடம் இயற்கையை மையமாக வைத்தே இறைவன் பற்றிய சிந்தனை களை கருத்துக்களை வெளிப்படுத்தினர் என்பதற்கு வெண்நிறத்த விரையோடு அலர் உந்தித், தென்நிறத்த புனல்பாய் திருப்பத்தூர்[1] என்ற சம்பந்தர் தேவார வரிகளே சான்றாகும். இயற்கை நமக்கு அளித்த கொடைகளுள் முக்கியமானது மலர்களே. மலர்களே மரங்களின் குழந்தைகள். மலர்கள்தான் காய், கனி எனப் பரிணாமம் அடைகின்றன. இன்றைய அறிவியல் பூக்களையும் அதனை பராமரிக்கவும் புஃளோரிகல்ச்சர் என்னும் பெயரில் பயிற்சி அளிக்கின்றது.

இச்செய்திகளையெல்லாம் பக்தி இலக்கிய கால புலவர்கள் முன்னேரே அறிந்து இருந்தனர் என்பதை **நெய்தல் ஆம்பல் கழுநீர் மலந்தூங்கும்**[2] என்னும் வரிகள் கொண்டு அறியலாம். பக்திஇலக்கியங்களுள் ஒன்றாக பதினொன்று திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்கு கின்ற திருமந்திரமும் **அமுதுறு மாமழை**[3] என்று இயற்கையின் வித்தாக விளங்கும் மழையினை போற்றுவதோடு பல பாடல்களில் இயற்கையின் முக்கியத்துவத்தினையும் உணரச் செய்கின்றது. இயற்கையின் கொடையான **மலர்களையும் பூவின் மணத் தைப் பொருந்திய வாயுவுந்**[4] எனக் கூறி அதன் மருத்துவக் குணங்களை இலைமறை காயாக தெரிவிக்கின்றது. அதனை ஆய்ந்து நோக்கி இன்றய தலைமுறையினர் அறியச் செய்யும்வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

### 1. வில்வம்

சைவ மரபிலுள்ள ஆலயங்கள் தோறும் காணப்படும். சிவனுக்குரிய பூசை மலர்களுள் ஒன்று என்பதால் பல சிவன் கோயில்களின் தல விருட்சமாகவும் விளங்குகின்றது. இது 15 அடி முதல் 20அடி உயரம் வளரக்கூடியது. பூ பூக்காமலேயே காய்க்கும் மரமாகும். ஈகிள் மார்மிலோஸ் என்பது இதன் அறிவியல் பெயர். இலைப் பரப்பு வழவழப்பாக ஒளிரும் தன்மை உடையதோடு அதன் நுனி விரிந்திருக்கும் அல்லது பிளவுற்று இருக்கும்.இது கூட்டிலை,மூவிலை அல்லது ஐந்து இலைகளை கொண்டிருப்பதோடு இவ்இலைகள் நீள்வட்டமாகவும் ஈட்டி வடிவத்திலும் காணப்படும். சில சமயம் நீண்டு அரச இலையைப் போல் இருக்கும் இவ்இலைகள் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்பவற்றை குறிக்கின்றது. இது சிவத்துருமம், மாதுரம், நின்மலி, கூவிளம், கூவிளை, குசாபி, வில்வம், வில்வ பத்ரி என்னும் பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இமயமலையின் அடிவாரம், இலங்கை, ஜீலம், பலுசிஸ்தானம் போன்ற இடங்களில் காணப்படுகின்றது. இம்மரத்தின் பூக்கள் ஐந்தங்க மலர் வகையைச் சேர்ந்தவை. இதன் பூ வாய் நாற்றத்தைப் போக்குவதோடு விசத்தினையும் முறிக்கும் ஆற்றல் கொண்டது. ஒருபிடி வில்வ இலையினை சிறிது நீரில் ஊற வைத்திருந்து எட்டு மணி நேரத்திற்கு பின் நீரிலுள்ள இலைகளை அகற்றி நீரை மட்டும் அருந்தி வர வயிற்றுவலி மேக நோய்கள் குணமாகும். வில்வமரத்தின் கொழுந்தை தினமும் சாப்பிட்டு வர புற்றுநோய் நீங்கும் என்பது சித்தர்கள் கூற்றாகும். யாப்பிலக்கணத்தில் ஈரசை, நான்கசை சீர்களை கூவிளம் கூவிளதண்பூ என்னும் வாய்பாட்டால் குறிக்கின்றனர். கபிலர்வில்வத்தினை குறிஞ்சிப்பாட்டில் **கூவிளம்**[5] என்றழைக்கின்றார். கடையெழு வள்ளல்களில் ஒருவனான எழினி அடையாளத்திற்காக இப்பூவினை சூடினான் என்பதை **கூவிளங் கண்ணிக், கொடும்பூண், எழினியும்**[6] என புறநானூறு எடுத்துரைப்பதோடு அவ்கூவிள மரத்தின் விறகினை எரியூட்ட பயன்படுத்தியதாக **கூவிள விறகின் ஆக்குவரி நுடங்கல்**[7] எனக் குறிப்பிடுகின்றது. கூவிளம் பூவை மாலையாகக் கட்டி அணிந்ததை **"கூதளம் ததைந்த கண்ணியன் யாவதும்**[8] என்று நற்றிணை கூறுகின்றது. திருமூலர் இறைவனுக்கு உகந்த வில்வ மலரினை பச்சிலை எனக் குறிப்பிடுவதோடு அதனைக் கொண்டு வணங்க நமக்கு வேண்டியது கிட்டும் என்று **யாவர்க்கு மாம் இறைவற்கொரு பச்சிலை**[9] என்னும் வரியில் சுட்டுகின்றார்.

### 2. தாமரை

இது நீர்வாழ் பல்லாண்டுத் தாவரம். இதன் அறிவியல் பெயர் நெலும்போ நூசிபேரா (Nelumbo nucifera). தூய்மையின் அடையாளமாக கருதப்படும் பூ தாமரை ஆகும். தாமரை மலரின் பூக்கள் இதழ்கள் அக்கால கட்டிடக்கலையில் அலங்காரங்களில் பயன்படுத்தியதை தாமரைப் பூ நகரம் என மதுரையினை வழங்குவதிலிருந்து அறியலாம். அரவிந்தம், தாமரை, பங்கேருகம், கோகனகம், பதுமம், முளரி, வனசம், புண்டரீகம், அம்போருகம், கமலம் என்னும் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. தேவநேயப் பாவாணர் தாமரை என்னும் சொல் தும் - துமர் - தமர் - தமரை - தாமரை என்று பிறந்ததாகக் கூறுகின்றார். இதில் வெண்தாமரை, செந்தாமரை எனும் இரு நிறங்களில் பூக்கள் காணப்படுகின்றன. எகிப்திலிருந்து, ஆசியா, பாரசீகம், சீனம், இந்தியா போன்ற நாடுகளுக்கு பரவியதாகக் கூறப்படுகின்றது. அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவிவது போல தாமரை காலையில் மலர்ந்து இரவில் குவிந்து இதழ்கள் நண்பகலில் மூடிக்கொள்கின்றன. இந்தியாவின் தேசிய

மலராக தாமரை1950 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் அங்கீகரிக்கப்பட்டது. வியட்நாமின் தேசிய மலரும் தாமரையே. வெண் தாமரை, செந்தாமரை ஆகியவற்றில் வெண்தாமரையே அதிகம் மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. தாமரை பூவின் மகரந்த பொடியினை தேன் கலந்து காலையில் சாப்பிட கண்பார்வை தெளிவுபெறும், காதுகேளாமை நீங்கும்,ஆண்மைத் தன்மை அதிகரிக்கும். தாமரைபூவின் பொடியினை பனை வெல்லத்துடன் சாப்பிட இருமல் குணமாகும். வெண்தாமரையினால் இரத்த மூலம், சீத பேதி, ஈரல் நோய்கள், இருமல் கட்டுப்பட, மூளைக்கு பலம் தருகின்றது. தாமரை பனிக்காலத்தில் சூரியக் கதிர்களின் வெப்பத்தை உள் வாங்கிக் கொள்ளும் என்னும் அறிவியலினை **அலங்கு வெயிற் பொதிந்த தாமரை உள்ளகத்தன்ன சிறு வெம்மையளே**[10] என்று குறுந்தொகை உணர்த்துகின்றது. தாமரை மலர் விரிந்த நிலையினை ஒளிப்பிழம்பிற்கும், குவிந்த நிலையினை சுடரின் வடிவத்திற்கும் உவமையாக **சுடர்ப் பூந்தாமரை**[11] **எரி அகைந்தன்ன தாமரை**[12] என அகநானூறு கூறுகின்றது. இம்மலர் நீரில் இருக்கும் என்பதை “**பங்கயப் பூம் புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்**[13] என்கின்றது திருவெம்பாவை. இறைவனின் பாதங்களுக்கு தாமரைப் பூவினை **செழுக்கமலத் திரளனநின் சேவடி**[14] என்று உவமையாக கூறுகின்றனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி தன் நாணயத்தில் செல்வத்தின் சின்னமாகிய தாமரையை பொறித்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர். திருமந்திரத்தின் வழி **நெஞ்சத்தின் தூய்மைக்குதவனச் சடைமுடித் தாமரை யானே**[15] என்று தாமரை மலரினையும் **அன்புக்குதாமரை நூல்போல் தடுப்பார் பரந்தொடும்**[16] என்று தாமரை நூலினையும் திருமூலர் உவமிக்கின்றார். அவரே கமலம்,செந்தாமரை, புண்டரீகம் என தாமரையின் வேறு பெயர்களாக **சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்து**[17], **ஆதிக் கமலத் தலர்மிசையானுஞ்**[18], **புண்டரிகத்தினுட் பூசனை யாளே**[19] என்னும் வரிகள் வாயிலாக சுட்டுகின்றார். அதோடு மனிதனின் உடலில் காணப்படும் ஆஞ்ஞை, விசுத்தி, அநாகதம், மணிபூரகம், மூலாதாரம், சுவாதிஷ்டானம், என்னும் ஆறு ஆதார மையங்களை தாமரை மலரினை மையமாக வைத்தே **அடுக்குத் தாமரை, எடுக்கும் தாமரை, மடுக்கும் தாமரை, முடுக்கும் தாமரை**[20] எனக் கூறுவதிலிருந்து அம்மலரின் சிறப்பினை அறியலாம்.

### 3. செண்பக மலர்

செண்பகம் என்னும் பெயர் வடமொழிச் சொல்லான ஐம்பகா என்ற சொல்லிலிருந்து உருவானது ஆகும். இதனை ஆங்கிலத்தில் CHAMPAK என்றழைக்கின்றனர். மக்னோலியா குடும்பத்தைச் சார்ந்த இதன் அறிவியல் பெயர் மைக்கீலியா சம்பாகா (Michelia champaca) ஆகும். இது வெள்ளை, மஞ்சள் இருவண்ணத்தில் பூக்கின்றன. இமயமலைப் பகுதியின் கிழக்குப்பகுதி, அஸ்ஸாம், நேபால், அருணாச்சல பிரதேசம், பர்மா, சீனா போன்ற இடங்களில் அதிகமாக காணப்படுகின்றது. அதேசமயம் தமிழ் நாட்டில் திருத்தென்குடித்திட்டை, திரு இன்னம்பர், திருச்சிவபுரம், திருநாகேசுவரம், திருப்பெண்ணாகடம் முதலிய சிவத் திருக்கோயில்களிலும் திருச்சேறை, திருநந்திபுரவிண்ணகரம் ஆகிய திருமால் கோயில்களிலும் தலவிருட்சமாக செண்பக மரம் உள்ளது. தலையில் நீர்கோத்தல், கண்நோய், தொண்டை வீக்கங்கள், வயிற்று உப்புசம், பசியினை அதிகரிக்க பயன்படுகிறது. மேலும் இதிலிருந்து அத்தர், பன்னீர் மற்றும் பலவிதமான வாசனைத் திரவியங்களும் தயாரிக்கப்படுகின்றன. இவ்வளவு சிறப்பு வாய்ந்த செண்பகப் பூ

சங்க இலக்கியங்களில் **பெருதண் சண்பகம்** என அழைக்கப்படுவதனை **செருத்தியதிரல் பெருந்தண் சண்பகங்[21]** என்ற வரிகளைக் கொண்டு அறியலாம். இப்பூவினை சுரமகளிர் தலையில் சூடியதாக நக்கீரர் **துவர முடித்த துகள்அறு முச்சிப் பெருந்தண் சண்பகம் செரீஇ[22]** என்கின்றார். பக்தி இலக்கிய மான நாச்சியார் திருமொழி இம்மலரை தேன் சுரக்கும் செண்பகமலர் **கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்[23]** எனக் கூறுகின்றது. இதன் சிறப்பினை அறிந்து உணர்ந்து இம்மலரினை சிவபெருமானின் பூசைக்குரிய எண்வகை மலர்களுள் ஒன்றாக வைத்து வழிபடுங்கள் எனத் திருமூலர் **செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடவே[24]** வரியின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

**பாதிரி**

இதன் அறிவியல் பெயர் ஸ்டீரியோஸ்பெர்ம் ஸ்வாவேலென்ஸ் அல்லது பிக்னோனியா ஸ்வாவேலென்ஸ் என்பதாகும். அம்பு, அம்புவாகினி பாடலம் புன்காலி எனவும் அழைக்கின்றனர்.

பாலை நிலப்பகுதியில் வேனிற் காலத்தில் வளரும் தன்மைக் கொண்டது. பசுபிக் தீவுகளில் உள்ள மக்கள் மாலையாகவும் அங்குள்ள பெண்கள் காதோரமும் சூடிக் கொள்கின்றனர்.

இலங்கையில் இம்மரம் கோவில்களில் வளர்க்கப்படுகின்றது. இந்தியாவில் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்ட கெடில நதிக்கரையிலுள்ள புலியூரில் இம்மரம் அதிகம் காணப்பட்டதால் இன்றளவும் திருப்பாதிரிபுலியூர் என்றழக்கப்படுகின்றது. அதோடு அங்கு குடிகொண்டிருக்கும் பாடலீசுவரர் கோயிலின் தல மரமாகவும் விளங்குகின்றது. இம்மரத்தின் பூக்களை அரைத்து தலையில் பற்றுப்போட தலைவலி தீரும். இப்பூவினை நசுக்க வரும் சாற்றுடன் தேன் கலந்து உண்டு வர விக்கல் நிற்கும் இதய தசைகள் வால்வுகள் பலப்படும். இதனை நீரில் இட்டு காய்ச்சி தொடர்ந்து பருகிவர ஆண்மைக்குறைவு நீங்கும். மூலநோய், ஆஸ்துமா, குடல்புண் போன்ற நோய்களுக்கும் அருமருந்தாக பயன்படுகின்றது. இன்று இம்மலர் அரிதாக காணப்பட்டாலும் சங்க இலக்கியங்களில் இதனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதனை **அத்தப் பாதிரித் துய்த்தலைப் புது வீ[25] புன்காற் பாதிரி அரிநிறத் திரள் வீ[26] வேனிற் பாதிரிக் கூனி மா மலர்[27] என்ற** அகநானூற்று வரிகள் வளையாத தழைகளைக் கொண்டும் அப்பூவின் காம்பு சிறுத்து வளைந்து அடிப்பூ கருத்து இருக்கும் என்றும் கூறுவதன் வாயிலாக அறியலாம். இவ்வளவு மருத்துவக் குணம் நிறைந்த பாதிரி பூவினை கொண்டு இறைவனை வணங்கி வர நன்மை கிட்டும் என்று திருமூலர் **செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடவே[28]** என்ற திருமந்திர வரியின் வாயிலாக உணர்த்துகின்றார்.

**5. செங்காந்தள்**

செங்+காந்தி+இதழ் எனப்பிரித்துக் காணும்பொழுது சிவப்பான நெருப்பின் வடிவத்தை இதழ்களைக் கொண்ட மலர் என்ற பொருள்வழி செங்காந்தள் எனப்படுகின்றது. இதன் மலர் அகல் விளக்கினை போன்று ஆறு இதழ்களை கொண்டதாக மஞ்சள் இளஞ் சிவப்பு நிறத்தில் காணப்படுகின்றது. இம்மலர் இதன் அறிவியல் பெயர் குளோரியோசா சுபர்பா ஆகும். தமிழகத்தின் மாநில மலராகவும் ஜிம்பாவே நாட்டின் தேசிய மலராகவும் விளங்குகின்றது. கார்த்திகைப் பூ, காந்தள் கலப்பைக்கிழங்கு வெண்தோன்றிக் கிழங்கு, அக்னிசலம், கண்வலிப்பூ, கண்நோய் பூ, கார்த்திகைக் கிழங்கு என வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. ஆப்ரிக்கா,

மலேசியா, ஜிம்பாவே, இலங்கை, மலாக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. இதனுடைய விதை, இலை, காய், பூ, கிழங்கு அனைத்தும் சருமநோய், குஷ்டம், மூட்டுவலி போன்றவற்றை தீர்க்கும் மருத்துவக்குணம் கொண்டவை. இந்தியாவில் ஆயுர்வேத யுனானி மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. வாதநோய், மூட்டுவலி, தொழுநோயைக் குணப்படுத்துவதுடன் பால்வினை நோய், வெண்குஷ்டம் போன்றவற்றைக் குணப்படுத்தும் மருந்தாகவுள்ளது. இதனை தமிழ்நாட்டில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பயிரிட்டு ஏற்றுமதி செய்து வருமானமும் ஈட்டு கின்றனர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இம்மலரை தொல்காப்பியர் முருகப் பெருமானை தொழும் வெறியாட்டு நிகழ்வின்பொழுது காந்தள் மலரினை சூடியதாக" **காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடுவதைக் கூறும் புறத்துறை**[29] என தொல்காப்பியர் கூறுகின்றார். குறிஞ்சிப் பாட்டில் தொன்னூற்று ஒன்பது பூக்களில் ஒன்றாக **ஒண்செங் காந்த ளாம்பலனிச்சந்**[30] எனக் குறிப்பி டுகின்றார். பதிணென் கீழ்க்கணக்கு நூலான நாலடியார் காந்தள் மலர்கள் மலரவில்லையெனில் மகரந்தசேர்க்கை நிகழாது என அதன் சிறப்பினை அறிவியலோடு **கல்லோங்கு உயர்வரைமேல் காந்தள் மலராக்கால்**[31] எனக் குறிப்பிடுவதனைக் காணலாம். இம்மலரினை அறிந்து சிறப்பினை உணர்ந்த திருமூலர் செங்கழுநீர் என்று திருமந்திரத்தில் இம்மலரினை கூறுவதனை **அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்**[32] என்ற வரிகொண்டு அறிந்து கொள்ளலாம்.

### ஆம்பல்

பெண்களின் முக அழகினை ஆம்பல் மலர்க்கு சங்ககால புலவர்கள் ஒப்பிடுவது உண்டு. அச்சிறப்பான ஆம்பல் குளம், குட்டை போன்ற நீர்நிலைகளில் வெள்ளாம்பல், செவ்வாம்பல் இருநிறங்களில் வளரும் நீர் வாழ்த்தாவரம் ஆகும். இவை நீரில் மிதக்கும் அகன்ற நீள்வட்ட இலைகளையும் நுண்குழலுடைய இலைக் காம்புகளையும் உடையது. இதன் மலர்கள் நீர்மேல் மிதந்து கொண்டிருக்கும். இதன் அறிவியல் பெயர் நிம்பேயோ பூபென்ஸ் என்பதாகும். அல்லி, குமுதம், கைரவம் என்ற பல பெயர்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது. வங்காளதேசம், இந்தியா, இலங்கை, யுன்னான், தைவான், பிலிப்பீன், கம்போடியா, லாவோஸ், மியான்மர், மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, பப்புவா நியூ கினி போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. இது வங்கதேசத்தின் தேசிய மலர். இம்மலர் உடல் புண், நீரழிவு நோய், நா வறட்சி, சிறுநீர் பிரச்சினை போன்ற நோய்களைக் குணமாக்கும் என அகத்தியர் எழுதிய குண வாடகம் கூறுகின்றது. அதோடு இம்மலர்க்கு பெண்களின் மலட்டுத் தன்மையைப் போக்கும் ஆற்றல் உண்டு. இம்மலர் கார்கால பருவத்தில் மிகுதியாக மலர்வதால் மாரிஆம்பல்[33] என்று குறித்தனர். இது காலையில் மலர்ந்து மாலையில் மறையும் என்பதனை **நீர்ஆர் செறுவில் நெய்தலொடு நீடிய நேர்இதழ் ஆம்பல் நிரை இதழ்**[34] **குண்டு நீர் ஆம்பலும் கூம்பின; இனியே வந்தன்று, வாழியோ மாலை**[35] என்ற வரிகளைக் கொண்டு அறியலாம். இதில் வெளாம்பல் செவ் ஆம்பல் என இருவகைகள் உண்டு என்பதனை **செவ்வாய் ஆம்பல்**[36] **சிறு வெள் ஆம்பல்**[37] என்ற வரிகள் கூறுகின்றது. திருமூலரும் நாம் உணர வேண்டிய உள்நிலைத் தத்துவங்களை **கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை**[38] என அரிய ஆம்பல் மலர் கொண்டு சுட்டுகின்றார்.

### குவளை

குவளையும் ஆம்பலினைப் போன்ற நீர்வாழ்த்தாவரமாகும். இவ்விரு மலர்களும் ஒரே மாதிரியான தோற்றம்

கொண்டது போல் தோன்றினாலும் சற்று உற்றுநோக்கும்பொழுது ஆம்பல் வளைந்த கூர்மையையான இதழ் கொண்டது குவளையோ சற்று கூர்மையில்லாது வளைந்த இதழ் கொண்டது என்பது புலப்படும். இதன் அறிவியல் பெயர் நிம்பேயா நௌசா லியா. இலக்கியங்களில் நீலம் செங்குவளை கருங்குவளை காவி செங்கழுநீர், உத்பலம், குவளையம் என்னும் பல பெயர்களில் குறிக்கப்படுகின்றன. இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. திருவாரூரில் குடிகொண்டிருக்கும் தியாகராசருக்கு இம்மலர் இன்றும் நாள் தோறும் படைக்கப்படுகின்றது. நீர் வேட்கை உடற்சூடு வயிற்றுப்போக்கு, இரத்த மூலம், கண் எரிச்சல், இருமல்,ஆண்களின் உயிரணுக்களின் எண்ணிக்கையைப் பெருக்க போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. வள்ளுவப் பெருந்தகை பெண்களின் அழகோடு குவளை மலரினை **காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்**[39] என ஒப்பிடுகின்றார். மொட்டு, கூம்பு போன்ற அமைப்புடன் இருக்கும் என்பதை **குவளைக் கூம்புவிடு பல் மலர்**[40] என்ற அகநானூற்றுப் பாடல் சுட்டுகின்றது. இம்மலரினை **பைஞ்சுனைப் பாசடை நிவந்த பனி மலர்க் குவளை**[41]. இம்மலரை **பைஞ்சுனைப் பாசடை நிவந்த பனி மலர்க் குவளை**[42] என்றும் கயத்துவளர் குவளை"[43] எனக் கூறுவதன் வாயிலாக குவளையில் செங்குவளை நீலக்குவளை ஆகிய இரு இனங்கள் உள்ளதை அறியலாம். பெண்களின் கூந்தலில் குவளை மலரின் மணம் வீசுவதை **குவளை நாறும் குவை இருங் கூந்தல்**[44] என்று குறுந்தொகை கூறுகின்றது. தேவாரத்தில் குவளை மலர் நிறைந்த திருமருகல் என்னும் ஊரில் குடியிருக்கும் சிவ பெருமானை **மடையார் குவளை மலரும் மருகல்**[45] என இவ்வரிகளில் குறிப்பிடுவதைக் காணலாம். திருமூலர் செய்யவேண்டிய செயல்களை காலத்தே செய்யாமல் இருந்தாலும் பெண் ஆசை கொண்டு அலைந்தாலும் வாழ்வு சிறக்காது என்பதை **உழவன் உழவினிற் பூத்த குவளை**[46] என்னும் வரிகள் கொண்டு எடுத்துரைக்கின்றார்.

**மல்லிகை**

இதன் பெயரினைக் கூறிய உடன் இதிலிருந்து பிறக்கும் நறுமணம் தான் நினைவுக்கு வரும். இதன் அறிவியல் பெயர் ஜாஸ்மினம் புயூபெசன்ஸ் ஆகும். பெர்சிய மொழியில் கடவுளின் பரிசு என்று பொருள்படும் YASAMEEN என்னும் சொல்லிலிருந்து ஆங்கிலத்தில் JASMINE என்ற சொல் பிறந்தது என்கின்றனர். தமிழில் மல்லி என்பதற்குப் பொருள் பருத்தது, உருண்டது மற்றும் தடித்தது என்பதாகும். இதனால் இம்மலர் மல்லிகை எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். சங்க இலக்கியங்களில் அதிரல், குளவி, மௌவல் என்றும் வழங்கப்படுகின்றது. இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர் போன்ற நாடு களில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டின் மதுரை மல்லிகை மிகவும் உலக அளவில் புகழ்பெற்று விளங்குவதால் அதன் தரத்தை காப்பதற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது குண்டு மல்லி, அடுக்குமல்லி, சாதிமல்லி, காட்டு மல்லி, இருவாச்சி என இதில் பல வகைகளைக் காணலாம். இவ்வளவு சிறப்புவாய்ந்த மல்லிகைப் பூக்களை சாப்பிடுவதால் நோய் எதிர்ப்புசக்தி, சளி, மூக்கடைப்பு, மூச்சுத் திணறல்,சிறுநீ ரகப் பிரச்சினை, வயிற்றுக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, பெண்களுக்குண்டாகும் கருப்பைப் பிரச்சினைகள், மாதவிடாய் சீராகுதல் போன்ற பிரச்சினைகளை தீர்க்கும் மருத்துவக் குணம் கொண்டது. இம்மலரிலிருந்து தேநீர், மல்லிகை எண்ணெய், நறுமணத்தைலம் போன்றவை தயாரிக்கப்படுகின்றது. இது

பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய மலராகவும் விளங்குகின்றது. சங்க இலக்கியங்களில் **மல்லிகா மாலை வளாய்**[47], **மல்லிகை, மௌவல், மணம் கமழ் சண்பகம்**[48] என்று பரிபாடலில் மட்டுமே மல்லிகை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிலம்பில் **இல்வளர் முல்லை மல்லிகை மயிலை**[49] **மாதவி மல்லிகை**[50] எடுத்தாளப்பட்டுள்ளன. இதனைப் போன்று திருமந்திரத்திலும் **தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை**[51] என்று இறைவனின் பூசைக்குரிய மலராக கூறுகிறார்.

## குருக்கத்தி

நறுமணமிக்க மலர்களைக் கொண்ட பெரிய கொடிகளைக் கொண்ட குருக்கத்தி தற்காலத்தில் குருகு என்றழைக்கப்படுகின்றது. இதன் வேறு பெயர்களாக மாதவி,கத் திகை, வசந்தமல்லி என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தாவர அறிவியலில் ஹிப்டேஜ் மாடபுளோட்டோ என்றழைக்கப்படுகின்றது. இதன் மலர் வெண்ணிறமாக அகவிதழ் மஞ்சள் நிறம் கொண்டு கண் கவரும் வகையில் அமைந்திருக்கும். இந்தியாவில் வெப்பம் நிறைந்த இடங்களிலும் மலேசியா, சீனா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலும் வளர்கின்றது. கசப்பும், இனிப்பும் கலந்த சுவை உள்ள இப்பூவினால் தலைநோய், தாகம், கபம், புண், பித்தம், பல்வகை விஷக்கடி ஆகியவை குணமாகின்றன. சங்க இலக்கிய புலவர் ஒருவர் இம்மலரினை உண்ணும் இடியாப்பத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதனை **பாசிலை குருகின் புன் புற வரி பூ கார் அகல் கூவியர்பாகொடுபிடித்த**[52] என்ற வரிகளில் காணலாம். குருக்கத்தி மலரோடு பித்திகை மலரினை சேர்த்துக் கட்டி விற்ற உழவர் மகளை **துய்த் தலை இதழ பைங் குருக்கத்தியொடு பித்திகைவிரவு மலர் கொள்ளீரோ?**[53] என்று நற்றிணை பேசுகின்றது. குருக்கதிப் பூவினை கத்திகை என்று முருகனுக்குரியதாகச் **"கத்திகைக் கண்ணியை அணிந்த கடவுள்**[54] என சிந்தாமணி கூறுகின்றது. திருமூலரும் **வம்பு அவிழ் பூகமும் மாதவி மந்தாரம்**[55] என சிவனுக்குரிய பூசை மலராக மாதவி என்னும் பெயரில் குறிப்பிட்டு கூறுவதனைக் காணலாம்.

## தும்பை

இதன் அறிவியல் பெயர் லியூகஸ் ஆஸ்பெரா என்பதாகும். இது செடிவகையினை சேர்ந்தது. வறண்டநிலங்களிலும் கடல் மடத்திலிருந்து மூவாயிரம் அடி உயரம் கொண்ட இடங்களிலும் ஒரு அடி முதல் மூன்றடி உயரம் வரை வளரக்கூடியது. இதன் நீளமான இலைகளுக்கு நடுவே வெண்ணிறம் உடைய மணம் வீசும் பூக்கள் காணப்படும். இவை விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன. தும்பை, பெருந்தும்பை, சிறுதும்பை, கருந்தும்பை, மலைத்தும்பை, பேய்த்தும்பை, கழுதை தும்பை, கசப்புத்தும்பை, கவிழ்தும்பை, மஞ்சள் தும்பை என பல வகைப்படும். இம்மலரினை நல்லெண்ணெயில் காய்ச்சி தலையில் தேய்த்து குளிக்க தலைவலி நீங்கும். அதன் சாற்றினைப் பாலில் கலந்து குடிக்க விக்கல் நீங்கும்.மேலும் தும்பை இலையின் சாற்றில் தேன் கலந்து அருந்த கபம் குணமாகும் பித்தம் குறையும். நஞ்சு முறிக்கும் தன்மை இதற்கு அதிகம் உண்டு. இதனைப் போர் மலர் என இளஞ்சேரனார் கூறுகின்றார். **வெட்சி முதல் நொச்சி வரை எதுவாயினும் போர்களத்தில் கைகலப்பு நேரும்போது தும்பைத் திணையாகும்.**[56] வெண்மை நிறம் கொண்டதனால் கமழ் பூந்தும்பை என்றனர். தும்பைபூவினைச்சூடி வீரர்கள் போருக்கு சென்றதனை **"ஒளிறு ஒள் வாடக் குழைந்த பைந்தும்பை**[57] என்று புறம் கூறுகின்றது. வீரர்கள் பொன்னால் செய்த தும்பைப் பூவைச் சூடி போரிட்டதை **புரையோர்க்குத் தொடுத்த பொலம்**

***பூந் தும்பை***[58] என மதுரைக் காஞ்சி கூறுகின்றது. இளமகளிர் தும்பை மாலையைச் சூடியதை ***தும்பை மாலை இளமுலை***[59] என்று ஐங்குறுநூறு தெரிவிக்கிறது. தும்பைப் போர் குறித்து ***தும்பை பகைவர் போர் பீடு***[60] பதிற்றுப்பத்து பேசுகின்றது. இவ்வாறு பல இலக்கியங்கள் பேசினும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ***தும்பை வகுளம் சுரபுனனை மல்லிகை***[61] என இறைவனுக்கு உரியதாக கூறி இதன் சிறப்பினை மக்களை உணரச் செய்துள்ளார்.

**கொன்றை**

கொன்றை மரங்களில் பூக்கள் மஞ்சள் நிறத்தில் பொன் மழை பொலிவது போல் பூத்துக் குலுங்கி காண்பவர்களை கவர்ந்திலுக்கும். இம்மரம் 20 அடி உயரமும் இலைகள் இறகு வடிவத்து உடன் 7 - 21 செமீ நீளமும், 4 - 9 செமீ அகலமும் கொண்டவை. காசியா பிஸ்டுலா என்பது இதன் அறிவியல் பெயராகும். ஸ்ரீலங்கா, மொரிசியஸ், தென்ஆப்ரிக்கா, பிரேசில், போன்ற நாடுகளிலும் காணப்படுகிறது. கடுக்கை, இதழி, தாமம், மதலை, ஆர்க்குவதம், சரக்கொன்றை, நீள்சடையோன், பிரணவ, கொன்னை என்றழைக்கின்றனர். இதன் வகைகளாக புலிநகக்கொன்றை, மயில்கொன்றை, சரக்கொன்றை, செங்கொன்றை, கருங்கொன்றை, சிறுகொன்றை, மந்தாரக் கொன்றை மற்றும் முட்கொன்றை எனக் கூறுகின்றனர். இது முல்லை நிலத்திற்குறிய மலராகும். கேரள மாநிலத்தின் மாநில மலர். இம்மலரினை துவையலாக்கி உணவுடன் சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். நீரிழிவு, பேதி, குடல் புண், காய்ச்சல், தொண்டை புண் போன்ற நோய்களுக்கு மருந்தாக பயன்படுகின்றது.

இரத்தத்தைச் சுத்தம் செய்கின்றது. கபிலர் ***துங்கிணர்க் கொன்றை***[62] என்கின்றார். அகநானூறு ***இணர் ததை கடுக்கை ஈண்டிய தாதின்***[63] என்று கடுக்கை என்னும் பெயரில் சுட்டுகின்றது. குறுந்தொகை கொன்றை மரங்களில் புதிய மலர் தோன்றி தலைவியிடம் கார் பருவத்தின் வருகையை உணர்த்துவதை ***புதுப் பூங் கொன்றைக் கானம், கார் எனக் கூறினும்***[64] என்ற வரிகளில் காணலாம். ***அடர்பொன் என்னச் சுடரிதழ் பகரும்***[65] என்று ஐங்குறுநூறு அடர்பொன்னாக உவமிக்கின்றது. கொன்றை மலர் பொற்காசுடன் ஒப்பிட்டு ***நன்னெடுங் காந்தட் போதினறை விரிகடுக்கை மென்பூத் பொன்னொடும் காசை நீட்டிக் கொடுப்பதே போன்ற தம்மா***[66] என கம்பராமாயணம் உவமிக்கின்றது. திருஞான சம்பந்தர் ***பூவார் கொன்றைப் புரிபுன் சடை***[67] என கொன்றையினை பொன்னோடு ஒப்பிடுகின்றார். பாரதிதாசன் ***காந்தற் பூ கை ஏந்திடும் கொன்றை மலர் பொன் கொட்டுகின்றாள்***[68] என காந்தளை கை எந்தச் செய்து கொன்றையினை வள்ளாக்கியுள்ளதைக் காணமுடிகின்றது. மக்களில் ***உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்களின்றி அனைவரையும் தேன் நிறைந்த கொன்றை மலரினை சூடி சிவபெருமான் காப்பதாகதேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது***[67] எனக் கூறி கொன்றை மலர்ச் சிறப்பினை திருமூலர் எடுத்து ரைக்கின்றார்.

**நிறைவுரை**

மலர்கள் பூமிதனில் மனிதன் காடுகளில் வாழ்ந்த காலம் தொடங்கி இன்றைய நாகரிக வளர்ச்சி அடைந்த காலம் வரை பல்வேறு பரிணாமங்கள் அடைந்து காணப்படுகின்றன. மலர்கள் வெறும் அழகுக்காக மட்டும் பயன்படுவதில்லை மருத்துவக் குணங்கள் கொண்டதாகவும் விளங்குவதனை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. பக்தி நூல், சாத்திர நூல், அறிவியல் நூல் எனப் பல வகையில் கடலினைப் போன்று பரந்துப் பட்டு விளங்குகின்ற திருமந்திரமும் மலர்களைப் பற்றியும் அவற்றின் மருத்துவக் குணங்களையும் எடுத்தியம்புவதனை அறிய முடிகின்றது.

## குறிப்புகள்

1. வ.த.இராமசுப்ரமணியம், பன்னிரு திருமுறைகள் தொகுதி-1,சம்பந்தர் தேவாரம் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை.பாடல் - 277
2. மேலது - 278
3. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. பாடல்-105
4. மேலது - 441
5. கதிர்முருகு, பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம். சென்னை. 2012. பாடல் வரி:65
6. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்,சென்னை. 2018. பாடல் -158:9
7. மேலது - 372: 6
8. டாக்டர் கதிர்முருகு, பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம். சென்னை. 2012. பாடல் வரி:75
9. ப.இராமநாத பிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. பாடல் -109 :1
10. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018. பாடல்-376:5-6
11. புலியூர்க்கேசிகன், அகநானூறு களிற்றியானை நிரை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018 பாடல் - 6:16
12. மேலது - 106:1
13. பா. அன்பரசு, திருப்பாவை திருவெம்பாவை மூலமும் எளிய தமிழ் உரையும், நர்மதா பதிப்பகம், சென்னை. 2016. பாடல்-13:8
14. திருவாசகம் மூலமும் தெளிவுரையும், எம்.நாராயண வேலுப்பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம். 1998 அடைக்கலப் பத்து - 1:1
15. ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழகவெளியீடு, சென்னை. 2009. திருமந்திர ம் -4:4
16. மேலது- 2520:1
17. மேலது- 27:1
18. மேலது- 52:2
19. மேலது- 1061:4
20. மேலது-1120.
21. கதிர்முருகு, பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம். சென்னை.2012.பாடல்வரி:75
22. புலியூர்க் கேசிகன், திருமுருகாற்றுப்படை, சாரதா பதிப்பகம். சென்னை. 2013. பாடல் -497.26:27
23. கதிர்முருகு, ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2012. பாடல்-43.5
24. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்-979.4
25. புலியூர்க்கேசிகன், அகநானூறு மணிமிடை பவளம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018. பாடல்-191.1
26. மேலது-237.1
27. மேலது-257.1
28. ப.இராமநாத பிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்தி ரம்-979.4
29. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 2008. ப. 315
30. கதிர்முருகு, பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம். சென்னை. 2012. பாடல்-61
31. கு.மதுரைமுதலியார், நாலடியார் விளக்கவுரை, பாரி நிலையம், சென்னை. 1988. பாடல்- 283.1

32. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்-979.1
33. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2020. பாடல் -117 :1
34. புலியூர்க்கேசிகன், கலித்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2020. பாடல் -75:1-2
35. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2020. பாடல்-122:2-3
36. புலியூர்க்கேசிகன், பரிபாடல் மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம், சென்னை. 2019. பாடல்-8:116
37. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018. பாடல் -70:11-12
38. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்-2861
39. கலைஞர் மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை, திருமகள் நிலையம். சென்னை. 2010. குறள்-1114
40. புலியூர்க்கேசிகன்,அகநானூறுகளிற்றியானை நிரை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018 பாடல் -36:3-4
41. புலியூர்க்கேசிகன், ஐங்குறுநூறு மூலமும் உரையும்,பாரி நிலையம், சென்னை. 1983. பாடல்- 225: 2
42. மேலது- 277 : 5
43. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதாபதிப்பகம், சென்னை. 2020. பாடல்-300 :1
44. வ.த.இராமசுப்ரமணியம், பன்னிரு திருமுறைகள் தொகுதி-1, சம்பந்தர் தேவாரம் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை. பாடல் -தேவாரம்-1655:3
45. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம்,கழக வெளியீடு சென்னை. 2009. திருமந்திரம்-1593:2
46. புலியூர்க்கேசிகன், பரிபாடல் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2019. பாடல்- 11:105
47. மேலது.12: 76
48. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், அம்சா பதிப்பகம், சென்னை. 2013. இந்திரவிழவூரெடுத்த காதை வரி- 191
49. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், அம்சா பதிப்பகம், சென்னை. 2013. புறஞ்சேரி இருத்த காதை. வரி-120
50. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்.979:3
51. பொ.வே. சோமாசுந்தரானார், பத்துப்பாட்டு மூலமும் உரையும் கழக வெளியீடு. 1956. பெரும்பாணாற்றுப்படை. வரி-375
52. புலியூர்க்கேசிகன், நற்றிணை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2019. பாடல்-97:6-7
53. ஜெ.ஸ்ரீசந்திரன், சீவகசிந்தாமணி மூலமும் தெளிவுரையும் 3 ஆம்பாகம், வர்த்தமானன் பதிப்பகம் குணமாலையர் இலம்பகம்-971:1
54. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்.979:2
55. கு.சீநிவாசன், சங்க இலக்கியத்தில் தாவரங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம். ப -595
56. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018.பாடல்-347:3
57. கதிர்முருகு, மாங்குடி மருதனாரின் பத்துப்பாட்டு மதுரைக் காஞ்சி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2013. வரி:737
58. புலியூர்க்கேசிகன், ஐங்குறுநூறு மூலமும் உரையும், பாரி நிலையம், சென்னை. 1983.பாடல்-127 : 2

59. புலியூர்க்கேசிகன், பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சாரதாபதிப்பகம், சென்னை. 2020. பாடல்-14:8-9
60. ப.இராமநாதபிள்ளை, திருமந்திரம் மூவாயிரம்,கழக வெளியீடு, சென்னை. 2009. திருமந்திரம்-979:3
61. கதிர்முருகு, பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம். சென்னை. 2012. பாடல் வரி:86
62. புலியூர்க்கேசிகன், அகநானூறு நித்திலக்கோவை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2018 பாடல் -393:15
63. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2020. பாடல் -21:3-4
64. புலியூர்க்கேசிகன், ஐங்குறுநூறு மூலமும் உரையும், பாரி நிலையம், சென்னை. 1983 பாடல்-432:2
65. கோ.சுப்ரமணிய பிள்ளை, கம்பராமாயணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1965 கிட்கிந்தா காண்டம், கார்காலப் படலம்-4283
66. வ.த. இராமசுப்ரமணியம், பன்னிரு திருமுறைகள் தொகுதி-1, சம்பந்தர் தேவாரம் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை. பாடல் -250:1
67. கோ. கோவை. இளஞ்சேரன், இலக்கியம் ஒரு பூக்காடு, இராக்போர்ட் பப்ளிகேஷன், சென்னை. 1982. ப:436
68. ப. இராமநாத பிள்ளை, திருமந்திரம் மூவாயிரம், கழகவெளியீடு, சென்னை. 2009. பாடல்-57:2.